**தினசரி சந்தை நிலவரத்தின் வெற்றிக்கதை - கோலூர் விவசாயி**



பி. ருத்ரப்பா

த/பெ பையன்னா

கோலூர், அந்தர்ஹல்லி

டோட்டபள்ளபூர் தாலுகா

பெங்களூர் மாவட்டம்

கர்நாடகா

அலைபேசி: 09844313443

**முன்னுரை:**

என் பெயர் திரு.பி. ருத்ரப்பா, த/பெ பையன்னா, வயது 41 கோலூர் கிராமம், அந்தர்ஹல்லி அஞ்சல், டோட்டபள்ளபூர் தாலுக்கா. இது தலைநகர் பெங்களூரில் இருந்து 50 கி.மீட்டர் தொலைவில் டோட்டபள்ளபூர் தாலூக்காவின் வடக்கு பகுதியில் அமைந்துள்ளது. நான் பி.காம் முடித்தவுடன் வேலைக்கான வாய்ப்புகள் கிடைக்காத காரணத்தினால், நான் விவசாயத்தை எனது தொழிலாக மேற்கொண்டேன். கடந்த 12 வருடங்களாக நான் சிறப்பாக விவசாயம் செய்து வருகிறேன்.

**உற்பத்தி செய்யும் பயிர்கள்:**

எனது மொத்த விவசாய பூமி 12 ஏக்கர். இதில் 7 ஏக்கர் வறண்ட பூமி 5 ஏக்கர் பாசன பூமி. ஆழ்துழாய் கிணறு மூலம் நீர்ப்பாசனம் செய்து வருகிறேன். என் நிலம் கருப்பு மண் வகையை சார்ந்தது. நான் தக்காளி மற்றும் சோளத்தை அதிகமாக பயிர்செய்து வருகிறேன். தக்காளிக்கு நாம்தாரி நிறுவனத்தின் விதைகளையே உபயோகித்து வருகிறேன். தக்காளியை அக்டோபர் மாதம் 1 ஏக்கரில் வரிசைமுறையில் நடவு செய்தேன் ஒரு மாதத்திற்கு பிறகு பார்களாக மாற்றி அமைத்தேன். நடவின் பொழுது அடியுரமாக பண்ணை உரக்கழிவுகளை போடுவேன். ஒரு மாதம் கழித்து கலப்பு உரம் 17:17:17 100கிலோ / ஏக்கர் மற்றும் வேப்பம் புண்ணாக்கு 100கிலோ / ஏக்கர் என்ற அளவில் கொடுக்கப்பட்டது. மேலும் நடவு செய்த ஒரு மாதத்திற்கு பிறகு செடிகள் சாயாதவாறு பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டது. பூஞ்சாணம் மற்றும் புழுக்களின் தாக்கத்தை தடுக்க பயிர்பாதுகாப்பு மருந்துகளான பெவிஷ்டின் மற்றும் ரெட்டோமில் தெளிக்கப்பட்டது. நடவு செய்த 2 மாதங்களுக்கு பிறகு பழங்கள் வரத்தொடங்கின. அறுவடையானது கூலி ஆட்களைக் கொண்டு 3 நாட்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டது. நான் ஒவ்வொரு அறுவடையின் பொழுதும் 150 மூட்டைகளை அறுவடை செய்தேன். அறுவடை தொடர்ந்து ஒரு மாதம் நடைபெறும்.

**விற்பனை:**

விற்பனைக்கு நாங்கள் அருகில் உள்ள டோட்டபள்ளபூர் ஏபிஎம்சி சந்தையையே சார்ந்து இருந்தோம். சில சமயங்களில் எஸ்வந்த்பூர் சந்தைக்கும் பெங்களூரு கே.ஆர் சந்தைக்கும் அனுப்பி வந்தோம். இந்த மூன்று சந்தைகளின் விலைகளும் வேவ்வேறாக

இருந்த காரணத்தினாலும் என்னால் ஒவ்வொரு சந்தையின் விலை நிலவரத்தை அறிய முடியாத காரணத்தினாலும் நான் தக்காளியை விற்பனை செய்வதில் சிக்கலை சந்தித்து வந்தேன். பெரும்பாலான சமயங்களில் நான் உள்ளூர் சந்தையில் விற்பனை செய்து வந்த காரணத்தினால் குறைந்த லாபத்தையே பெற்று வந்தேன்.

**தினசரி சந்தை நிலவரத்தினால் விவசாயம் இலாபகரமானது:**

டோட்டபள்ளபூர் தோட்டக்கலை அலுவலர் சிவனாந்து மூலமாக கே.ஆர் சந்தை ஆய்வாளர் ஸ்ரீகாந்த் அவர்களை சந்தித்தேன். ஸ்ரீகாந்த் அவர்கள் எங்கள் கிராமத்திற்கு தோட்டக்கலை அலுவலர் சிவனாந்து அவர்களுடன் வந்தபொழுது எனது தோட்டத்திற்கும் வந்தார். அவர் மூலமாக தினசரி சந்தை நிலவரத்தை பற்றி அறிந்து கொண்டேன்.

அவர் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் தினசரி சந்தை நிலவர இணைய தளத்தை எனக்கு அறிமுகப்படுத்தினார். தினசரி சந்தை நிலவரம் விவசாயிகளுக்கு எப்படி விற்பனை தொடர்பான சிக்கல்களை தீர்ப்பதற்கு உதவுகிறது என்பதையும் தினசரி சந்தை நிலவரத்தை உபயோகப்படுத்தல் அதிகவிலையுள்ள சந்தைகளில் விற்பனை செய்வதன் மூலமாக அதிக லாபம் பெறமுடியும் என்பதையும் தெரியப்படுத்தினார். மேலும் நான் கே.ஆர் சந்தையைப் பற்றி அதிக தகவல்களையும் தெரிந்து கொண்டேன். சந்தையின் அமைப்பு ஏலவகை, ஏலநேரம், பணப்பட்டுவாடா முறை போன்ற தகவல்களையும் பெற முடிந்தது. நான் தினசரி சந்தை நிலவரத்தை பற்றி நன்கு அறிந்து கொண்ட பின்பு நான் தொடர்ந்து இணையதளத்தை பயன்படுத்தி வந்ததோடு. உள்ளூர் சந்தை டோட்டபள்ளபூர் ஏ.பி.எம்.சி சந்தை, எஸ்வற்பூர் சந்தை மற்றும் கே.ஆர் சந்தை பெங்களூர் விலை

நிலவரங்களையும் ஒப்பிட்டு வந்தேன். தக்காளியின் விலையானது உள்ளூர் சந்தை மற்றும் எஸ்வந்த்பூர் சந்தைகளை விட பெங்களூர் கே.ஆர் சந்தையின் விலை அதிகமாக இருந்தது. இதனால் நான் பெங்களூர் கே.ஆர் சந்தைக்கு பொருள்களை அனுப்புவது சிறந்தது என்பதை உணர்ந்து கொண்டேன். மேலும் இப்பொழுது நான் முன்பைவிட அதிக வருமானம் அடைந்து வருகிறேன். மேலும் தோட்டக்கலை பயிர்களை அதிகவிலையுள்ள சந்தைகளில் விற்பனை செய்வதுதான் சிறப்பானது என்பதை அறிந்து கொண்டேன்.

இது தினசரி சந்தை நிலவரத்தின் மூலமாக சாத்தியமானது.

இந்த இணையதளத்தின் உள்ள தகவல்கள் எனக்கு மிகவும் உபயோகமாக உள்ளது. இதில் மொத்த மற்றும் சில்லறை விலை நிலவரங்கள் இருப்பதால் சந்தையின் விலை நிலவரங்களை ஒப்பிட்டு பார்த்து அதற்கு ஏற்றார்போல் அறுவடை காலங்களை திட்டமிட முடிகிறது. நான் விவசாயம் முன்பைவிட லாபகரமாக இருப்பதை உணர முடிகிறது. தினசரி சந்தை நிலவரங்களின் மூலம் இத்தகைய குறிப்பிடத்தக்க நன்மைகள் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

தினசரி சந்தை நிலவரம் எனக்கு விவசாயத்தின் மீதும் சந்தை படுத்துவதன் மீதும் அதிக ஆர்வத்தை ஏற்படுத்தி உள்ளது. நான் தினசரி சந்தை நிலவரம் வழங்கும் தகவல்களை தொடர்ந்து பயன்படுத்துவேன். இந்த இணையதளம் மட்டுமல்லாமல் நான் தக்காளியின் தினசரி சந்தை நிலவரங்களை அலைபேசியில் குறுந்தகவல்களாக பெற்று வருகிறேன். நான் எனது கிராமத்திலுள்ள எனது விவசாய நண்பர்களுக்கும் தினசரி சந்தை

நிலவரத்தின் இணைய தள சேவைகளையும் மற்றும் குறுந்தகவல் சேவையையும் உபயோகப்படுத்தி பயன்பெறுமாறு பரிந்துரை செய்கிறேன்.

தினசரி சந்தை நிலவரம் விற்பனையில், விவசாயிகளின் கண்ணோட்டங்களை மாற்றியுள்ளது. மேலும் விவசாயிகள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் தினசரி சந்தை நிலவரத்திட்டத்தின் விஞ்ஞானிகள் மூலமாக குறிப்பிடத்தக்க சேவைகளை பெற்றுள்ளார்கள். நான் எனது மனமார்ந்த நன்றியினை தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம் மற்றும் தினசரி சந்தை நிலவர திட்டத்திற்கும் தெரிவித்து கொள்கிறேன்.